# முஸ்லிம் பெண்களின் கல்வி

By: நயீம் சையத்

முஸ்லிம் பெண்களின் கல்வி தான் மிகவும் காரசாரமாக வாதாடப்படும் ஒரு விஷயமாக, உலகமெங்கும் ஒலிக்கப்படுவதை நாம் அறிவோம். இது, முஸ்லிம் அல்லாதவர் மட்டுமின்றி, முஸ்லிம்களில் கூட சிலர், தன் கல்வியின் ஞானக்கடலின் ஆழத்தை அறியாமல், அதை, ஆண்களுக்கென்றே அனாவசியமாக அற்பணித்துக்கொள்ள முயல்கின்றனர்.

அல்லாஹ்வின் அருட்கொடையான கல்வி முஸ்லிமான ஆண் பெண் இரு பாலர் மீதும் கடமையாக்கப்பட்டிருப்பதை பார்க்கத்தவறியவர் பலரால், இஸ்லாமிய கல்விமுறைக்கு ஏற்கனவே மிகவும் பாதிப்பு ஏற்பட்டுவிட்டது. இஸ்லாம் என்ற கட்டிடம் எழுப்பப்பட்ட தூண்களில் ஒன்று தான் கல்வியறிவு என்று இருக்கும் பொழுது அந்த சிலரின் கருத்துகளும் நடவடிக்கைகளும் ஒரு சோக பிரதிபலிப்பை ஏற்படுத்திவிட்டன. ஆனால், இது உண்மைக்கு புறம்பாக இருப்பதை அவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். அல்லாஹ் சுப்ஹானஹுதா'லாவினால் நமது நபி பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) மீது இறக்கப்பட்ட முதல் வார்த்தையே "இக்ரா" அதாவது "படி" என்பதாகும்.

ஸூரா - 39, வசனம் 9 (Zumar) ஸூரத்துஜ்ஜுமர் (கூட்டங்கள்) என்ற ஸூராவில் அல்லாஹ் அறிவிக்கின்றான் :

(நபியே!) நீர் கூறும்: “அறிந்தோரும், அறியாதோரும் சமமாவார்களா? நிச்சயமாக (இக் குர்ஆனைக் கொண்டு) நல்லுபதேசம் பெறுவோர் அறிவுடையவர்கள் தாம்.”

அல் குர்'ஆனின் கட்டளைகள் ஆணுக்கு மட்டிமின்றி, பெண்களுக்கும் சமமானவையே.

நபி பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பொன்மொழிகளில் சில :

«طَلَبُ الْعِلْمِ فَرِيضَةٌ عَلَى كُلِّ مُسْلِمٍ».

அதாவது , கல்வியறிவை தேடுவது, அனைத்து முஸ்லிம்களின் மீதும் கடமையாக்கப்பட்டிருக்கிறது. (விளக்கப்பட்டது : இப்ன மாஜா - அல்-ஸுனன், 1:81 § 224)

«اُطْلُبُوا الْعِلْمَ وَلَوْ بِالصِّينِ».

அதாவது : கல்வியை நாடுங்கள், அதற்காக நீங்கள் சீனா செல்லவேண்டியிருந்தாலும், சரி. (al-Bazzar in அல்-முஸ்னாத், 1:175 § 95.]

«مَنْ سَلَكَ طَرِيقًا يَلْتَمِسُ فِيهِ عِلْمًا سَهَّلَ اللهُ لَهُ بِهِ طَرِيقًا إِلَى الْجَنَّةِ».

அதாவது, "கல்விக்காக நடப்பவனுடைய சொர்க்கப்பாதையை அல்லாஹ் சுலபமாக்கிவிடுகின்றான். ( அல்- ஸஹிஹில், முஸ்லிமால் விளக்கப்பட்டது ) . *[Narrated by Muslim in al-Sahih, 4:2074 §2699.]*

அல்-குர்'ஆன் மற்றும் ஹதீத்திலிருந்து இரு பாலரும் கல்வி கற்கவேண்டுயது கட்டாயக்கடமையாக்கப்பட்டிருக்கிறதை நாம் அறிகிறோம். மேலும் நபி பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) உடைய வாழ்க்கையை ஆராய்ந்தோமானால், அவரே (ஸல்) இரு பாலரின் கல்வி மற்றும் பயிற்சிக்கு ஏற்பாடுகள் செய்தார் என நாம் அறிகிறோம்.

இப்ன அப்பாஸ் குறிப்பிடுகின்றார் : பதர் போர்க்கைதிகள் தம்மை விடுவித்துக்கொள்ள பணமோ வேறு வழிவகையோ இல்லாமல் இருந்ததனர். நபி (ஸல்) அவர்கள், மீட்டுப்பணத்திற்கு பதில் அன்சார் குழந்தைகளை எழுத கற்றுக்கொடுக்கும்படி செய்தார். இதிலிருந்து, கல்வியின் முயக்கியத்தும் விளங்குகிறது. (Ahmad ibn Hanbal (d. 241 AH/855 CE). Al-Musnad)

கல்விக்கு இஸ்லாமிய அறிவுரை, மார்க்கக்கல்வி வரை தான் என வாதாடுபவரும் உண்டு. அவர்கள் கவனத்திற்கு திருக்குர்'ஆனின் சில வசனங்களை கொண்டுவர விரும்புகின்றேன் :

﴿ٱقْرَأْ بِٱسْمِ رَبِّكَ ٱلَّذِى خَلَقَ. خَلَقَ ٱلْإِنسَـٰنَ مِنْ عَلَقٍ. ٱقْرَأْ وَرَبُّكَ ٱلْأَكْرَمُ. ٱلَّذِى عَلَّمَ بِٱلْقَلَمِ. عَلَّمَ ٱلْإِنسَـٰنَ مَا لَمْ يَعْلَمْ﴾

(யாவற்றையும்) படைத்த உம்முடைய இறைவனின் திரு நாமத்தைக் கொண்டு ஓதுவீராக. “அலக்” என்ற நிலையிலிருந்து மனிதனை படைத்தான். ஓதுவீராக: உம் இறைவன் மாபெரும் கொடையாளி. அவனே எழுது கோலைக் கொண்டு கற்றுக்

கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான். (ஸூரத்துல் அல:்க்(இரத்தக்கட்டி, வசனங்கள் 1 முதல் 5 வரை)

மேற்சொன்ன முதல் கட்டளை, கல்வியறிவை தேடும் ஒரு செயல்முறையாக, "ஓதுவீராக" என்றும், அத்துடன், அல்லாஹ் படைப்பவனாகவும், பரிபாலிப்பவனாகும் சொல்லப்பட்டு, அதில் இரண்டு விதமான கல்விப்பிரிவுகளை குறிப்பிட்டுள்ளான் -- ஒன்று கருவியல் (Embryology) மற்றொன்று சமூகவியல் (Socialogy). அவ்வாறு, உயிரியல் மற்றும் அறநெறி அறிவிகப்பட்டு, இஸ்லாமிய கல்வி என்பது, மார்க்கக்கல்வியுடன் நின்று போகாமல், எல்லையற்ற துறைகளில் அறிவை தேட அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

திருக்குர்'ஆனின் பல பகுதிகளில், அல்லாஹ் அவன் படைப்புகளை நோக்கி, அவை இயங்கும் முறையை கவனிக்கக்கூறுகின்றான். இக்கட்டளைகள், ஆணுக்கு மட்டுமின்றி, பெண்களுக்கும் சேர்த்துத்தான். ஆகவே, பெண்களை மார்க்கக்கல்வி வரை வரயறுத்துவிடுவது, அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

வானத்தையும், அதிலிருக்கும் தூரத்து அபூர்வங்களான, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மற்ற கோள்கள், பூமியின் மீதும், பூயின் அடியில் கிடக்கும் எண்ணற்ற பொக்கிஷங்களைப்பற்றியும் சிந்திக்க கூறுகின்றான். கடலில் இருக்கும் நீரின் தன்மை,. உப்பு நீரும் நல்ல நீரும் கலவாமை (Oceanology) கூறுகின்றான்.

அல்லாஹ் தன்னுடைய வேதத்தில் ஸூர 41, வசம் - 53 -ல் கூறுகின்றான் :

நிச்சயமாக (இவ்வேதம்) உண்மையானது தான் என்று அவர்களுக்குத் தெளிவாகும் பொருட்டு நம்முடைய அத்தாட்சிகளை (உலகத்தின்) பல கோணங்களிலும், அவர்களுக்குள்ளேயும் சீக்கிரமே நாம் அவர்களுக்குக் காண்பிப்போம்; (நபியே!) உம் இறைவன் நிச்சயமாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பது உமக்குப் போதுமானதாக இல்லையா?

இவையெல்லம், தேடுபவருக்கு கிடைக்கக்கூடிய அறிவுகள், முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு, அவை படிப்படியாக இறைவனால் வெளிக்கொணரப்படும்.

மற்றொன்று தவறான கூற்று என்னவென்றால், பெண்களுக்கு பெண்களே கல்வி புகட்டவேண்டும் என்பது. அப்படியென்றால், நபி (ஸல்) பெருமானர் காலத்தில், பெண்களின் கல்விக்காகவே ஒரு நாள் அவர் (ஸல்) ஒதுக்கியிருக்கமட்டார். நாம் கவனிக்க வேண்டியது எல்லாம், சரியான பர்தாமுறையும், ஆடை உடுத்திக்கொள்ளும் கண்ணியம் தானே தவிர, நல்ல ஆண் டீச்சர்களை கொண்டு பெண்களுக்கு கல்வி கற்று தருவதை தடைவிதிக்க அல்ல.

ஆப்கானிஸ்தானத்தைத்தவிர, உலகத்தில் வேறு எங்கும், எந்த முஸ்லிம் நாட்டிலும், பெண்களுக்கு கல்வி அளிப்பதில் தடையில்லை. இன்றைய தினம், சுமார் 40,000 மாணவ மாணவிகள் சௌதி அரேபியாவிலிருந்து அமெரிக்க நாட்டின் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்கின்றன, அவர்களில் 60 சத வீதம் பெண்களே என்பது கவனிக்கத்தக்கது. விரிகுடா நாடுகள் அனைத்தின் சிந்திக்கும் திறன் இன்று மாறி விட்டது. அங்கேயும் பெண்களின் கல்விக்கு பல வழிவகைகள் செய்யப்படுகின்றன.

ராக்கெட் செலுத்தி, தூரத்து கோளங்களை அடைய முயற்சிக்கும் முஸ்லிம் அல்லாத பெண் இனத்தை நாம் காணும் பொழுது, இன்னும் முஸ்லிம் பெண்களுக்கு கல்வி தேவையா என்ற விவாதத்தில் நாம் வீழ்ந்து கிடப்பது, நாம் எவ்வளவு பின்னோக்கிப்பார்வை கொண்டுள்ளோம் என்பதை தெளிவாக்குகிறது.

ஆகவே சகோதரர்களே, இன்று முதல் நாம் நம் யோசிக்கும் முறையை மாற்றி, அனாவசியமாக, பெண்களின் கல்விக்கு எந்த தடை தடங்கலும் இல்லாமல், நம் பெண் குழந்தைகளையும் ஆண் குழந்தைகளுக்கு ஈடாக கல்வி புகட்ட ஆவன செய்வோம் என உறுதிகொள்வோம்.

---